

கிருஷ்ணகிரியில் தி.மு.க. வர்த்தகர் அணியின் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் மாநில வர்த்தகர் அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்டக் கழகச் செயலாளர்கள் டி.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் கேவிஸ் சீனிவாசன் வரவேற்றார். மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் பி.டி.அன்பரசன் முன்னிலை வகித்தார். இதில் வர்த்தகர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு அரசின் வணிகர் நல வாரியத்தில்

# தி.மு.க. வர்த்தகர் அணி நிர்வாகிகள் சிலரை உறுப்பினர்களாக சேர்த்திட வேண்டும்!

### கிருஷ்ணகிரியில் காசி முத்து மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கழக வர்த்தகர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

*கிருஷ்ணகிரி, ஆக. 27 -*

கிருஷ்ணகிரியில் தி.மு.க. வர்த்தகர் அணியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம், மாநில வர்த்தகர் அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்டக் கழகச் செயலாளர்கள் டி.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் கே.வி.எஸ். சீனிவாசன் வரவேற்றார். மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் பி.டி. அன்பரசன் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

1) ஒன்றிய அரசு நிதிப் பரிமாற்றத்தில், தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்த போதும், தளபதி ஒற்றை மனிதனாக விடிந்தால் புதிய திட்டம் என திட்டங்களை அறிவித்தும், பொருளாதார முன்னேற்றத்தில் 14 ஆண்டுகளுக்கு பின் இந்தியாவிலேயே முதலிடத்தை பெற்றுத்தந்த தங்கத் தளபதிக்கு வர்த்தகர் அணி தன் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறோம்.

2) தமிழக அரசின் வணிகர் நல வாரியத்தில் தி.மு.க. வர்த்தகர் அணி நிர்வாகிகள் சிலரை உறுப்பினராக நியமித்திட, தரணி போற்றும் தலைவர் பாதம் தொட்டு வேண்டுகிறோம்.

3) வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக ரூ.500 கட்டணத்தை பதிவு செய்யும் காலத்தை வருகிற நவம்பர் மாதம் வரை நீட்டித்து தந்தமைக்கும். விபத்தில் வணிக உறுப்பினர்கள் இறக்கும் நேர்வில் ஏற்கனவே வழங்கி வந்த ரூ.3 லட்சத்தை, ரூ.5 லட்சமாக உயர்த்தி தந்தமைக்கும் தங்கத் தளபதிக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**காதர்மொய்தீனுக்கு தகைசால் தமிழர் விருது!**

4) இந்திய யூனியன் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத்தின் வழி வந்த பேராசிரியர் காதர்மைதீன் அவர்களுக்கு தகைசால் தமிழர் விருது வழங்கிய, தமிழக அரசின் கதாநாயகன், தமிழக முதல்வர் திராவிட தளபதி அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

5) தமிழகத்தில் பா.ஜ.க. பலருக்கு முகவரி தந்தது. ஆனால், தமிழக பா.ஜ.க.விற்கு முகவரி தந்தவர் இல.கணேசன் அவர்கள் தான். அந்த இல.கணேசன் மறைந்த போது, அவர் நாகலாந்து கவர்னராக இருந்தபோதிலும், தமிழ்நாடு அரசின் சார்பில் உரிய மரியாதையும், தேவையான அனைத்தும், தமிழ்நாடு முதல்வர் தளபதிக்கும், அவரது உத்தரவை செவ்வனே செய்து முடித்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், பண்பாடு மாறாமல் பா.ஜ.க. மூத்த தலைவர் இல.கணேசனுக்கு உதவிட்ட, தமிழக முதல்வர், அண்ணா வழி வந்த தர்மதுரை தளபதிக்கு இந்த மாமன்றம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

**அமெரிக்க அதிபர் டிரம்புக்கு அடி பணிந்த பிரதமர் மோடி!**

6) வங்கதேசத்தில் போர் நடைபெறும் போது. அமெரிக்க போர் கப்பல்கள், இந்திய கடல் எல்லையை ஒட்டி வந்த போது, அந்த மிரட்டல்களுக்கு எல்லாம் அடிபணியாமல். துணிச்சலாக வங்கதேசத்தை பிரித்துக் கொடுத்தவர் அன்னை இந்திராகாந்தி. ஆனால், இன்று பாகிஸ்தான் பிரச்சினையில் மோடிக்கு துணிச்சல் இல்லாமல், அமெரிக்க அதிபர் டிரம்பிற்கு அடிப்பணிந்து போர் நிறுத்தம் செய்தார். இந்த போர் நிறுத்தம் செய்யப்பட்டதற்கு நான் தான் காரணம் என்று 29 முறை அதிபர் டிரம்ப் கூறியும், அதற்கு பிரதமர் மோடி மறுப்பும் தெரிவிக்கவில்லை. போர் நிறுத்தம் செய்யப்பட்டதற்கு அதிபர் டிரம்ப் தான் காரணம் எனவும் கூற வில்லை. மறுத்தால் தனக்கு இழுக்கு என்பதால், அமெரிக்கவின் வரி விதிப்பால் இந்திய வணிகர்களின் சட்டையில் அழுக்கு

இந்திய பொருட்கள் மீது 50 சதவீதம் வரி விதிக்கப் பட்டதால், தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் இருந்து நாள்தோறும் 4.50 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டு தேக்கமடைந்துள்ளது. இதே போல்,கோயம்புத்தூரில் இருந்து ஆயிரக்கணக்கான கிரைண்டர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், அமெரிக்காவின் இந்த வரி விதிப்பின் மூலம் இந்தியாவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு. விலைவாசி ஏறும். வணிகர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பிற்கு காரணமான ஒன்றிய பிரதமருக்கு எங்களது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

7) பத்திரப்பதிவு முந்தைய ஆட்சியை விட குறைவு என்றாலும் சொத்தின் மதிப்பை உயர்த்தி காட்டுவதால். அதிகவரி கட்டுவது மட்டுமல்லாது, வருமானவரி துறைக்கு காட்டாது பணத்திற்கு அபராத வரி கட்ட வேண்டிய சூழல் வருகிறது. எங்களது பணம் ஒன்றிய அரசுக்கு எந்தவகையிலும் செல்ல கூடாது என்பதை இம்மாமன்றம் சுட்டிக்காட்டுகிறது.

8) விதிமீறல் கட்டிடங்களுக்கு ஊராட்சி அலுவலர்கள் சீல் வைக்க அரசு அனுமதியளித்திருப்பது முறைகேடுகளுக்கு பெருமளவு வழிவகுக்கும். எனவே, விதிமீறல் கட்டிடங்களுக்கு சீல் வைக்க அனுமதியளித்திருக்கும் சட்டத்தை எதிர்த்து வழக்கு போட வேண்டுகிறோம். விளம்பர பதாகைகள் 10 மீட்டர் உயர்த்தி வைக்க. கமிட்டி வைத்து கொள்ள அனுமதி வேண்டுகிறோம்.

9) அடகுக் கடை வணிகர்களை விதிகளுக்கு புறம்பாக காவல்துறையினர் அத்துமீறல் இல்லாமல் உரிய சம்மன் அளித்த பின்னரே சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

10) சமூக விரோதிகளால் அல்லது விபத்துகளில் அகால மரணம் அடையும் சிறு, குறு வணிகர்களின் குடும்பத்தில் தகுதியுள்ள, கல்வி வாரிசுதாரர்களுக்கு அரசு பணி வழங்கிட பின்புலம் உள்ள வேண்டும்.

**சுங்கக் கட்டண உயர்வை நிறுத்துக!**

11) காலவாதியான சுங்கச்சாவடிகள் மற்றும் நகர்புறத்தில் இருந்து 60 கி.மீ தொலைவில் உள்ள சுங்கச்சாவடிகளை, மாநில, ஒன்றிய அரசுகள் அகற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், ஆண்டுதோறும் சுங்கக்கட்டணம் உயர்த்தப்படுவதை நிறுத்த வேண்டும். தமிழகத்தில் புதிதாக சுங்கச்சாவடிகள் வருவதை தடுக்க வேண்டும்.

12) நடுத்தர வாழ்வாதாரம் கொண்ட நீலகிரி மக்களின் வளர்ச்சிக்கு இடையுறாக இருக்கும் இபாஸ் முறையை முற்றிலும் நீக்க வேண்டும்.

13) தொழில் வணிகத்தில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தரும். சிறப்பான தொழில் வணிகர்களுக்கு பிறத்துறைகளில் தமிழக அரசு விருது வழங்கி ஊக்கப்படுத்துவதை போல், தொழில் வணிகர்களுக்கும் விருது வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

14) தமிழகத்தின் முக்கிய நகரங்கள் தொடங்கி, கிராம புறங்கள் வரை வர்த்தகத்தை தொடங்க கார்பேரட் நிறுவனங்கள் வணிகவளாகங்களை கட்ட வேகத்தை காட்டி ஆன்லைன் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதை தடுத்து நிறுத்திட வேண்டுகிறோம்.

**மகளிர் சுயஉதவிக்குழு கடன் நிலுவை ரத்து!**

15) மகளிர் சுயஉதவிக்குழு வாங்கிய கடனில் நிலுவைத் தொகை ரூ.2,674.64 கோடி தள்ளுபடி செய்தும், நகைகடனில் சுமார் ரூ.6,000 கோடி தள்ளபடி செய்த தங்கத்தளபதிக்கு இம்மாமன்றம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

16.) மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம் மற்றும் மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன்' திட்டங்கள் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 வழங்கி வரும். நல்ல உள்ளம் படைத்த தளபதிக்கு என்றும் நன்றி கூறுவோம்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பி.வி.எஸ்வி. மணிவிஜயன் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாகிகள்:

கே.செல்வம், வி.ஜெயன், நா.முருகவேல், பி.டி, பாண்டிச்செல்வம், எஸ். முத்து செல்வி, என். காமரை பாரதி, உமரிசங்கர், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், வே.பா.மணி இராமர், பெ.சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ். ராமகிருஷ்ரைன், பி.தர்ம்செல்வன், ஆ. சத்தியமூர்த்தி, கேவிஎஸ். சீனிவாசன், பி.டி. அன்பரசன், மாவட்ட நிர்வாகிகள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் பி.வி.எஸ்.பி. மணி விஜயன், தாம்பரம் சீப்ஸ் மணி, சென்னை வடகிழக்கு மாவட்ட அமைப்பாளர் தியாகராஜன், தருமபுரி மாவட்ட தலைவர் - முருகன், திருப்பத்தூர் மாவட்ட அமைப்பாளர் சரவணன், மாவட்ட தலைவர் ஜெயசீலன், மயிலை பாலு, காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் தினகரன், கோவை மத்திய மாவட்டம் மாரிசெல்வராஜ், மாவட்ட அமைப்பாளர் வி. ராஜா, திருப்பூர் தெற்கு தங்கராஜ், ஈரோடு கே.எம்.இராஜசேகர், ஈரோடு என்.எஸ். மணி, கடலூர் மேற்கு - குண (எ) குணசேகரன், விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் - வெங்கடேசன், தென் சென்னை - இராமமூர்த்தி, மயிலாடுதுறை - மோகன் அருண்குமார், நெல்லை - ஹேக்தாவுத் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திருமதி. ரேணுகாதேவி மறைந்துவிட்டாலும்

# குடும்பத்தினர் - உற்றார் - உறவினர் நெஞ்சங்களில் நீங்காமல் என்றென்றும் நிறைந்திருப்பார்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலுவுக்கு பிரதமர் மோடி எழுதிய இரங்கல் கடிதத்தில் உருக்கம்!

**புதுடெல்லி, ஆக. 27 -**

**கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு அவர்களின் துணைவியார் திருமதி ரேணுகா தேவி அம்மையார் அவர்கள் 19.8.2025 அன்று உடல்நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார். இந்த துயரச் செய்தியை அறிந்தவுடன் இந்திய பிரதமர் மோடி அவர்கள் தனது நெஞ்சார்ந்த இரங்கல்களையும் ஆறுதலையும் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக பிரதமர் மோடி அவர்கள் கழக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவுக்கு 19.8.2025 அன்று எழுதிய கடிதத்தின் விவரம் வருமாறு:

திருமதி ரேணுகாதேவி பாலு அம்மையார் அவர்கள் மறைந்த செய்தி என்னுள் துக்கத்தையும் சோகத்தையும் வரவழைத்துள்ளது.இத்தகைய இழப்பு இட்டு நிரப்ப முடியாத வெற்றிடத்தை விட்டுச் செல்கிறது .

அவர் ஊட்டிய விழுமியங்கள் குடும்பத்தினரை தொடர்ந்து ஊக்குவிக்க வல்லது.

அவருடன் வாழ்ந்த நினைவுகள் இந்த இக்கட்டான சூழலில் இருந்து நீங்கள் விடுபடத் தேவையான வலிமையைத் தரும் என நான் நம்புகிறேன்.

திருமதி ரேணுகாதேவி பாலு அவர்கள் மறைந்துவிட்டாலும் குடும்பத்தினர், உற்றார் உறவினர் என அனைவரின் நெஞ்சங்களிலும் அவர் நீங்காமல் என்றென்றும் நிறைந்திருப்பார்.

எனது நெஞ்சார்ந்த இரங்கல்களையும் உணர்வுகளையும் தங்களுக்கும் குடும்பத்துக்கும் தெரிவித்துக் கொள்கிறேன் .

இந்த துயரமான இழப்பை எதிர் கொள்ளும் பலத்தையும் ஆற்றலையும் தாங்கள் பெற்றிட வேண்டுகிறேன்.

இவ்வாறு பிரதமர் மோடி அவர்கள் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகராட்சி, தொன் போஸ்கோ அரசு நிதியுதவி பெறும் பள்ளி மற்றும் புனித சூசையப்பர் பெண்கள் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும்,ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முதலமைச்சரின் காலை உணவு விரிவாக்கத் திட்டத்தை தொடங்கி வைத்து சிறப்பித்தார். இதில் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நகரப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்க பள்ளிகளிலும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விரிவாக்கம் செய்து வைத்ததை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சின்னசேலத்தில் உள்ள சிறுமலர் தொடக்கப் பள்ளியில் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் இத்திட்டத்தை நேற்று தொடங்கி வைத்தார். இதில் மாவட்டம் திட்ட இயக்குனர் மகளிர் திட்டம் சுந்தர்ராஜன், ஒன்றிய செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர் அ.வெ.அன்புமணிமாறன், பேரூர் செயலாளர் கே.எம்.செந்தில் குமார், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கற்கோவில் இரா. இராமதாசு
### ஆகஸ்ட் 27 (2017)



**இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு நீடாமங்கலம் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**நீடாமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் – விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பல்லாவரம் மு.நாகலிங்கம் மறைவு!

பல்லாவரம், ஆக.27 –

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி கழகம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக பிரதிநிதி கழகத்தின் மூத்த முன்னோடி மான குளத்து மேடு மு. நாகலிங்கம் நேற்று முன்தினம் (25.8.2025) இரவு 8.00 மணி அளவில் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

காலம் சென்ற இவரது மனைவியும் அதைத்தொடர்ந்து வழக்கறிஞரான இவரது மகளும் பல்லாவரம் முன்னாள் நகர மன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள்.

இவர் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறைச்சென்றுள்ளார்.

கழகத் தோழர்களும் பொது மக்களின் அஞ்சலிக்காக இவரது உடல் பல்லாவரம் குளத்துமேடு பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப் பட்டுள்ளது.

மறைந்த மு.நாகலிங்கம் அவர்களுக்கு வெற்றிச்செல்வன் என்கிற மகனும் அமுதா என்கிற மகளும் உள்ளார்கள்.

## தி. மு. க. தொழிலாளர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 30.08.2025 சனிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.


பொருள் : 12.9.2025 அன்று தொழிலாளர் அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கூட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25-08-2025.

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.ஆர். ராமதாஸ்
### ஆகஸ்ட் 27 (2016)



**இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியதோடு, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இராசிபுரம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.**

**இராசிபுரம் நகராட்சித் தலைவராக வெற்றி பெற்று, நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். சேலம் மாவட்ட பொன்னி கூட்டுறவு அங்காடி நிர்வாக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.**

**1962–ல் விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – 1964–ல் சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தனது வாழ்நாள் முழுவதும் மிதிவண்டியிலேயே சென்று கழகப் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**